# ஸ்பிக் ஆலை:

# காற்றில் பறந்ததா அழகிரி வாக்குறுதி?

**கரிகாலன்**

'ஸ்பிக் உரத் தொழிற்சாலை பிப்ரவரி மாத இறுதிக்குள் திறக்கப்பட்டு விடும்' என்று உறுதியளித்தார் மத்திய ரசாயனம் மற்றும் உரத்துறை அமைச்சர் அழகிரி. ஆனால், ஸ்பிக் ஆலை திறக்கப்படாததால் தொழிலாளர்கள் குமுறிக்கொண்டிருக்கிறார்கள்.

நாட்டின் மிகப் பெரிய யூரியா தொழிற்சாலையான ஸ்பிக், கிட்டத்தட்ட மூன்று வருடங்களாக மூடிக் கிடக்கிறது. இதனால் ஸ்பிக்கில் இருந்து மூலப் பொருள் பெற்று இயங்கிய டாக் உரத் தொழிற்சாலை மற்றும் தூத்துக்குடி ஹெவி வாட்டர் யூனிட் ஆகியவையும் மூடப்பட, கிட்டத்தட்ட பத்தாயிரம் பேர் வேலையின்றித் தவிக்கின்றனர். இந்த நிலையில்தான் அமைச்சர் அழகிரி கொடுத்த வாக்குறுதியும் காற்றில் பறந்துவிட, ஆலை விவகாரம் விஸ்வரூபம் எடுத்துள்ளது.

நாம் 'ஸ்பிக் ஆலையை உடனடியாகத் திறக்க வேண்டும்' என்று போராடி வரும் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தூத்துக்குடி மாவட்டச் செயலர் கனகராஜிடம் பேசினோம்.



"ஸ்பிக் நிறுவனம் தனது உற்பத்தியை நிறுத்தியதால், இன்று டாக் மற்றும் கனநீர் ஆலை இரண்டும் செயல்பட முடியவில்லை. யூரியா விற்பனை கள்ள மார்க்கெட்டுக்கு வந்து விலையும் எகிறிவிட்டது. இவை அனைத்துக்கும் யார் காரணம்? 'ஸ்பிக் ஆலையைத் திறப்போம்' என்று சொல்லித்தான் சென்ற தேர்தலில் ஆளுங்கட்சி வாக்கு கேட்டது. தூத்துக்குடி தொகுதியில் தி.மு.க.வே வென்றது. மதுரையில் வென்ற அழகிரி மத்திய உரத்துறை அமைச்சரும் ஆனார். மாதா மாதம் 'விரைவில் ஸ்பிக்கை திறந்து விடுவோம்' என்றும் சொல்லி வருகிறார். ஆனால், லேட்டஸ்ட்டாக நாங்கள் கேள்விப்படும் தகவல்கள் முன்னுக்குப்பின் முரணாக இருக்கின்றன.

ஸ்பிக் நிறுவனம் வங்கிகளுக்கு செலுத்த வேண்டிய 82 சதவிகித கடனை அடைக்க அரசின் ஏ.ஆர்.சி. நிறுவனம் (Assets reconstruction Company) முயற்சி எடுத்தது. ஸ்பிக் நிறுவனத்தின் சொத்துக்களை ஷேர்களாக மாற்றி, அதன் முக மதிப்பை 9 ரூபாயில் இருந்து 18 ரூபாயாக மாற்றி, 30 கோடி ரூபாய் மதிப்புக்கு அளவு குறைந்த பங்குகளையே வாங்கியது இந்த நிறுவனம். இந்தத் திருட்டுத்தனத்தை செய்ய வைத்தது யார் என்பதுதான் எங்கள் கேள்வி. அடுத்து, 'ஏ.சி. முத்தையாவின் Ficon என்ற கம்பெனி 50 கோடி ரூபாய் மதிப்புக்கு ஸ்பிக்கின் ஷேர்களை வாங்கும்' என்றும் 'படிப்படியாகத்தான் வாங்கும்' என்றும் சொல்லப்பட்டது. இந்த நேரத்தில் ஸ்பிக்கின் ஷேர் 5 ரூபாயாக செயற்கையாக குறைக்கப்படலாம். அப்போது ஸ்பிக்கின் அதிக ஷேர்கள் அரசிடமிருந்து ஏ.சி. முத்தையாவின் கைக்குப் போய்விடும். இதுதான் ஸ்பிக் நிர்வாகத்தின் திட்டம். இதை எல்லாம் வேடிக்கை பார்க்கும் மத்திய அரசு, ஸ்பிக்கை எப்படி இயங்க வைக்கப் போகிறது.

அடுத்ததாக,கடந்த22ஆம்தேதிகூடியஸ்பிக்நிர்வாகிகளின்



மூடிக்கிடக்கும் ஆலை